**செய்தி வெளியீடு எண்:081** **நாள் : 17.02.2015**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (17.2.2015) தலைமைச் செயலகத்தில், ஜம்மு காஷ்மீர் மாநிலம், சோபியான் பகுதியில் 25.4.2014 அன்று தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் வீரமரணம் அடைந்த தமிழகத்தைச் சேர்ந்த ராணுவ வீரர் மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களின் தீரச்செயலைப் பாராட்டி இந்திய ராணுவத்தின் உயரிய விருதுகளில் ஒன்றான அசோக சக்ரா விருது வழங்கப்பட்டதையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் பண முடிப்பாக வழங்கப்படும் 12 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வீரமரணம் எய்திய மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களின் மனைவி திருமதி இந்து ரெபேக்கா வர்கீஸ் அவர்களிடம் வழங்கினார்.

ஜம்மு காஷ்மீர் மாநிலம், சோபியான் பகுதியில் 25.4.2014 அன்று தீவிரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில், 44–வது ராஷ்டிரிய துப்பாக்கிகள் படைப் பிரிவில் பணியாற்றி வந்த சென்னை, தாம்பரத்தைச் சேர்ந்த ராணுவ வீரர் மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்கள் வீர மரணம் அடைந்தார். அத்துயரச் செய்தியை அறிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 27.4.2014 அன்று அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்ததோடு 10 லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டார்கள்.

மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களின் துணிச்சல் மிக்க தீரச்செயலைப் பாராட்டி இந்திய ராணுவத்தின் மிக உயரிய விருதுகளில் ஒன்றான அசோக சக்ரா விருதினை சென்ற மாதம் டெல்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவின் போது மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களின் மனைவி திருமதி இந்து ரெபேக்கா வர்கீஸ் அவர்களிடம் வழங்கினார்.

தாய்த் திருநாட்டினைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள முப்படைவீரர்களின் துணிச்சல் மிக்க தீரச் செயலைப் பாராட்டி மத்திய அரசு வழங்கும் சக்ரா விருதுகளை பெறும் தமிழகத்தைச் சேர்ந்த ராணுவ வீரர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் பணமுடிப்பு வழங்கப்படுகிறது.

அந்த வகையில், மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களுக்கு அசோக சக்ரா விருது வழங்கப்பட்டதையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் பண முடிப்பாக வழங்கப்படும் 12 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (17.2.2015) தலைமைச் செயலகத்தில் மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களின் மனைவி திருமதி இந்து ரெபேக்கா வர்கீஸ் அவர்களிடம் வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), பொதுத் துறை முதன்மைச் செயலாளர் திரு யத்தீந்திர நாத் ஸ்வேன், இ.ஆ.ப., பொதுத் துறை கூடுதல் செயலாளர் திரு வெ. பழனிக்குமார், இ.ஆ.ப., மேஜர் முகுந்த் வரதராஜன் அவர்களின் தாய் தந்தை ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * * * *

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.
நாள் : 17.2.2015.